# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது

இல. 7,918 — 1932 ம் ஸு சித்திரைமீ 15 ந் திகதி, வெள்ளிக்கிழமை.

## Part IV. நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் விளம்பரம்.

'சுகாதார சங்கக் கட்டளைச்சட்டம், 1898.''

1898 ம் ஆண்டின் 13 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின் 56 (21) ம் பிரிவின்கீழ் கற்றன் டிக்கோயா சுகாதார சங்கத்தால் செய்யப்பட்டு, 1931 ம் ஆண்டு இலங்கை (மந்திர சபை) ஓடர் இன் கவுன்சில் (மந்திரசபை கட்டளைச்சட்டத்தின்) 93 ம் பிரிவால் கொடுத்த தத்துவத்தின்படி அதி உத்தம தேசாதிபதியவர்களால் மேற்சொல்லப்பட்ட சுகாதார சங்க கட்டளைச்சட்டத்தின் 57 ம் பிரிவின்கீழ் அங்கீகரித்த பின்வரும் துணைப்பிரமாணங்கள் சகலரு மறியும்படி பிரசுரஞ்செய்யப்படுகின்றன.

சாஸ் பத்துவந்துடாவ,
தத்தமிட ஆளுகை மந்திரி.

கொழும்பு, 1932 ம் ஸு சித்திரைமீ 11 ந் உ.

குறித்த துணைப்பிரமாணங்கள்.

1. எதாகிலும் வீட்டின், குடியிருக்குமிடத்தின், கோயிலின், வேலை ஸ்தலத்தின் ஒரு பகுதியாவது முழுவதும் காணக்கூடிய வெளிச்சமும் காற்றுமுள்ளதா யிருக்கவேண்டும். மேலும் அவைகள் சங்கத்தலைவரின் அல்லது அவரின் அதிகாரத்தின்படி நடக்கும் வேறு உத்தியோகஸ்தரின் கட்டளைப்படி வெளியாவது உள்ளுக்காவது வெள்ளையடித்து தொற்றுநோய் அணுகா மருந்தும் போட்டு வேறு விதமாயாவது துப்பரவுபண்ணியிருக்க வேண்டும்.

2. கூலிக்கிருப்பவன் அல்லது குடியிருப்பவன் தான் செய்கிறேன் என்று ஏற்றுக்கொண்டாலென்று சங்கத்தலைவரின் திருப்திப்படி ஒப்பனைபண்ணினாலொழிய வீட்டை நன்னிலையில் வைத்திருக்கவும் எலிகள் இருக்கக்கூடிய புத்துக்கள் நிலத்திலும் சுவரிலும் இல்லாமலிருக்கவும் பார்த்துக்கொள்ளவேண்டியது. ஒவ்வொரு வீட்டின் அல்லது வேறு கட்டிடத்தின் சொந்தக்காரனின் கடமையாகும். கூலிக்கிருப்பவன் அல்லது குடியிருப்பவன் மேற்சொல்லியபடி செய்ய ஒத்துக்கொண்டால் இக்கடமை அவனின் கடமையாகும்.

3. வியாபாரத்துக்கு பாவிக்கும் எல்லாக் கட்டிடங்களின் நிலங்களும் சீமந்தால் பூசியிருக்க வேண்டும். மற்றுங் கட்டிடங்கள் சங்கத்தலைவர் கருத்துப்போற் செய்ய வேண்டும்.

4. வீடாகப் பாவிக்குமிடத்தில் அல்லது வீட்டின் விறுந்தையில் அல்லது வீட்டுடன் தொடுக்கப்பட்டிருக்கும் கொட்டிலிலாவது மடுவத்திலாவது குதிரையாவது, கழுதையாவது, மாடாவது, ஆடாவது, பன்றியாவது அடைக்கப்படாது. வீட்டிலிருந்து 50 யாருக்குள்ளே மேற்சொல்லிய மிருகங்களில் ஒன்றாவது அடைக்கப்படாது.

5. வியாபாரத்துக்குப் பாவிக்கப்படுங் கட்டிடங்களில் அங்கே சேர்த்து வைத்த சாமான்களும் பொருள்களும் அவ்வீடுகளின் நல்ல வெளிச்சத்துக்கும் காற்றுக்கும் சுகமாய் சுத்தப்படுத்தற்கும் வில்லங்கமில்லாமல் வைக்கப்படல் வேண்டும். நிலத்தின் நாலிலொரு பங்கு ஒன்றும் வையாமல் வெறுமையாயிருக்க வேண்டும். இறப்பு "சீலிங்" க்கு 4 அடிக்குள் ஒரு சாமானும் அடுக்கப்படாது.

### அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ஸு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் நிலம் உடைந்துபோகாமல் பாதுகாத்தல் என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை அஃதாவது:—

துண்டு அளவை பிரதமபடத்து இலக்கம் 114 ல் 2 ம் துண்டுப்படம். குறிச்சி.—கிரிவன்எலியா, அம்பகமுவா கோறளை, உடபுலத்கம.

| துண்டு | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 347A | பினுவன்தெனியகேன .. | சேனை .. | எஸ். கெந்தறிக் பர்ணாந்து .. .. | 0 2 26·2 |
| 354A | நகேகவவத்த .. | சேனை .. | கெ. யி. புஞ்சிமெனிக்கா, கெ. எம். றத்துஅப்புகாமி, கெ. எம். கெந்தறிக் அப்புகாமி, கெ. எம். அப்புகாமி, கெ. எம். கீன் அப்புகாமி, கெ. எம். வண்டா, கெ. எம். றன்மெனிக்கா | 0 0 35·2 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதிவவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதினால் அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1932 ம் ஞூ (மே) வைகாசி மாசம் 13 ந் தேதியிலன்று 2 மணிக்கு கண்டிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கண்டிக் கச்சேரி,
1932 ம் ஞூ ஏப்பிரில்மீ 9 ந் உ.

டபிள்யு. டீ. கொட்சோல்,
உதவி அரசாட்சி ஏசண்டு, கண்டி.

---

1876 ம் ஞூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கிணறு வெட்டுவதற்கு என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பீ. எஸ். பீ. பீ. நெ. 1,125 இன் 1 ம் நெ, கொப்பி. குறிச்சி—கிரணைகம.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| 25A | கேதரகவாஅக்கர அல்லது புரான்வெல | வெறும் நிலம், கிணறு ஒன்று இருக்கிறது | ஜயசுந்தர ஹேரற் முதியன்செலாகே கப்புரால, கிரனகம | 0 0 0·75 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1932 ம் ஞூ வைகாசிமாசம் 25 ந் தேதியிலன்று காலை 8 மணிக்கு மடத்துக்கம தலைமைக்காரன் வங்களாவில் என் முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

அநுராதபுரக் கச்சேரி,
1932 ம் ஞூ சித்திரைமீ 8 ந் உ.

சீ. எல். விக்கிரமசிங்க,
அக்டிங் அரசாட்சி ஏசண்டு, வடமத்திய மாகாணம்.

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.